1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா இன்சுரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட்டின் (''கம்பனி'') கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கையின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனி மற்றும் தொகுதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

விடயத்தை வலியுறுத்துதல்

கம்பனி மற்றும் தொகுதி

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 46 இன் பிரகாரம், 2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதி தொழில் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 53 ஆம் பிரமாணத்தின் பிரகாரம் நீண்டகாலம் பொது காப்புறுதி தொழிலை இரண்டு தனித்தனி சட்ட கம்பனிகளாக பிரிப்பதற்கு நிறுவனத்தின் பிரித்தல் செயன்முறை மற்றும் திருத்தப்பட்ட 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் அதிகாரச் சட்டத்தின் பிரமாணத்தின் 30 ஆம் பிரிவு தொடர்பில் நிர்வாக நடைமுறை நிலை மற்றும் காப்புறுதி சேவைகளின் வரையறுத்த ரகஸ்சன (தனியார்) கம்பனியிலிருந்து வரையறுத்த இலங்கை காப்புறுதி ஆயளிற்கு மாற்றப்பட்ட ஊழியர்கள் மூலம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் விமிட்டட மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பொது லிமிட்டட் என அமுலாக்கப்பட்டது மற்றும் இதன் விளைவால் காப்புறுதி சேவைகள் வரையறுத்த ரக்ஸ்சன (தனியார்) கம்பனி செயற்பாடுகளில் ஏற்பட்ட தாக்கத்தை விவரிக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் என்னுடை அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக்கப்பட்டது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி மற்றும் தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி மற்றும் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனி மற்றும் தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி மற்றும் தொகுதி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி மற்றும் தொகுதி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி மற்றும் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி மற்றும் தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி மற்றும் தொகுதி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

	கணக்காய்வின் அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ	பங்குதாரர் முதலீடு மற்றும் கம்பனியின் சொத்துக்கள் பாதுகாப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை பேணல் சபை மற்றும் உயர் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. சபை மற்றும் உயர் முகாமைத்துவம் முறையான கட்டுப்பாட்டு சூழலை	SLIC ஆனது 2024 யூலை 15 இல் நடைபெற்ற சபை கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு சபை அனுமதித்த நிதி அதிகாரத்தை கொண்டுள்ளது. மேலும் கம்பனியானது பங்கு விற்பனை நடைமுறை தொடர்பில் நிதி அமைச்சின் நெறிப்படுத்தலை	கம்பனி தொடர்பில் சகல குறிபபிடத்தக்க நடைமுறை மற்றும் கணக்கு மீதிக்கான விரிவான உள்ளக கட்டுப்பாடு நடைமுறையை விருத்தி செய்து பேணுவதற்கு சபை மற்றும் உயர் முகாமைத்துவத்தின் பொறுப்பு என பரிந்துரைத்துள்ளது. இந்த

உருவாக்க வேண்டும். பிரயோகிக்கக்கூடிய சட்டங்கள், பிரமாணங்கள், விதியக், நெறிப்படுத்தல்கள் மற்றும் வழிகாட்டல் உள்ளடங்கலாக கம்பனியினுடைய உள்ளக கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்கையில் சபையினுடைய பொறுப்புகள் அவசியமான பகுதியாக உள்ளது. ஆகவே, கம்பனிக்காக குறிப்பிடத்தக்க உரிய கணக்கு மீதிக்கான உள்ளக கட்டுப்பாடு நடைமுறையை மேவுகின்றதும் பேணுவதும் அடிப்படை தேவையாக உள்ளது. எவ்வாறாயினும், மீதிக்கான உள்ளக கட்டுப்பாடு நடைமுறை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.	வேண்டியிருந்ததுடன் பணிப்பாளர் நாயகம், நிறுவன விவகாரங்களிற்கு முகவரியிட்ட 2025 பெப்ரவரி 05 மற்றும் 06 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு வேலைக் கட்டமைப்பு உள்ளடங்க SLIC இற்கு வைத்தது. தற்போது நாங்கள் அவர்களின் பதிலிற்காக காத்திருக்கின்றோம்.	விடயம் பிரதான ஆவணக் கட்டுப்பாடுகள், கட்டுப்பாட்டு உடமையாளர் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் அதிகரிப்பு என்பவற்றினை தெளிவாக கொண்டிருக்க வேண்டும் மற்றும் பிரயோகிகக்கூடிய பிரமாணங்கள் மற்றும் ஆளுகை வேண்டுகைகளுடன் இணங்க வேண்டும். வினைத்திறனான கட்டுப்பாட்டு சூழல், உருவாக்குவதற்கும் உள்ளக கட்டுப்பாடுகளின் போதுமான மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை உறுதி செய்வதற்கும் சபையினுடைய மேற்பார்வை பொறுப்புக்களை அதிகரிப்பதற்கும் அத்தகைய விடய பராமரிப்பு அடிப்படையாக உள்ளது.

1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறிதித நியமங்களிற்கான குறிப்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ	இலங்கை கணக்கீட்டு நியமம் - ஒன்றிணைந்த மற்றும் இணைந்த நிறுவனங்களில் முதலீடு (LKAS 28) இன் பிரகாரம் இணைந்த கம்பனிகளில் முதலீடு உரிமை மூலதன முறை முறையை பயன்படுத்தி பதியப்பட வேண்டும் ஆரம்பத்தில் இணைந்த கம்பனிகளின் முதலீடு கிரயத்தில் பதியப்பட்டதுடன் முதலீட்டாளர் இலாபம் அல்லது கொள்வனவு செய்த பின்னரான நட்டம் எனபவற்றின் முதலீட்டாளரின் பங்கினை வெளிப்படுத்துவதற்கு முற்கொண்டுவரும் தொகை சீராக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் LKAS 28 இன் ஏற்பாடுகளுடன் இணங்காமல் முதலீட்டாளர் இலாபம் அல்லது தறபோதைய பிஸ்கால் ஆண்டிற்கான நட்டம் என்பவற்றினை பதிய தவறியிருந்தது.	கணக்காய்வாளரின் பரிந்துரைகள் கவனத்திற் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் கம்பனி ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் முதலீட்டாளருடைய தேறிய சொத்து பெறுமதியின் (NAV) பங்குகளில் இணைந்த கம்பனியின் முதலீடுகளை அளவீடு செய்கின்றன. முதலீட்டின் முக்கியத்துவமின்மை காரணமாக தொகுதியின் வரிக்கு பின்னரான இலாபம் அல்லது EPS அல்லது காசு மீது பொருண்மையான தாக்கம் இருக்கவில்லை.	LKAS 28 இற்கமைய முகாமைத்துவம் இணைந்த கம்பனிகளில் முதலீடு செய்வதற்காக உரிமை மூலதன முறை கணக்கீடு பிரயோகிக்க பரிந்துரைத்துள்ளது மாற்றுவழி கணக்கீட்டு முறைகள் முறையான நியாயப்படுத்தல் மற்றும் ஆவணங்கள் மூலம் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டவை மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். இது பிரயோகிக்ககூடிய நிதி அறிக்கையிடல் வேண்டுகையுடன் இணங்குவதற்கும் நிதிக் கூற்றுக்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவேடுகள்

	விடயம்	பேரேட்டு பதிவுகளின் பிரகாரம் மீதி (ரூபா)	இணக்ககூற்றின் பிரகாரம் மீதி (ரூபா)	வித்தியாசம் (ரூபா)	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ	கணக்கு இல. – 1000760307 வங்கி கணக்கிணக்க கூற்று மற்றும் பேரேட்டு கணக்கிற்கும் இடையிலுள்ள வித்தியாசம்				இந்த பிரசிழன கம்பனி பிரித்தல் மற்றும் SAP குறைத்தல் காரணமாக எழுந்தது. தற்போது தீர்க்கப்பட்டதுடன் ஒவ்வொரு விடயமும் SAP குறைத்த பூர்த்தியான பின்னர் 2024 ஆகஸ்ட் 1 இலிருந்து சுமூகமாக செயற்படுகின்றது.	முகாமைத்துவம் எதிர்கால அசாதாரண நிலையை தடுப்பதற்கு உள்ளக கட்டுப்பாடு மற்றும் தொடர்புபட்ட நடைமுறைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் சகல கொடுக்கல் வாங்கல்களும் சரியாக உரிய நேரத்தில் பதியப்பட்டதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்த கட்டுப்பாடுகள் நிதி அறிக்கையிடலின் உண்மைத் தன்மை மற்றும் வினைத்திறனான செயற்பாட்டிற்கு ஆதரவளித்தலை முன்னேற்றப் படுத்தப்படும்.
	மே	2,183,161,209	2,150,474,927	32,686,282		
	யூன்	126,633,390	1,818,930,876	1,692,297,486		
	யூலை	129,954,594	1,435,784,078	1,305,829,484		
	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு	9,238,808	9,096,120	142,688		

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவைகள்

	கணக்காய்வின் அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ	ஏனைய கடன்பட்டோரின் கீழ் கடன்பட்டோரின் முற்கொடுப்பனவுகளில் ரூபா 127,740,664 தொகையான நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற மீதிகள் இருக்கின்றதென அவதானிக்கப்பட்டது. முகாமைத்துவம் இந்த மீதிகளின் அறவீட்டு தன்மையை கருத்திற்கொண்ட பின்னர் தீர்வு காண்பதற்கு உரிய அளவீடுகளை எடுத்திருந்தது. இது ரூபா (9,812,801) கூட்டுத் தொகையான நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற எதிர்மறை மீதிகள் ஏனைய கடன்பட்டோரில் பதியப்பட்டது என மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட	கம்பனியானது சட்ட ஆலோசனை அடிப்படையில் அந்த பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தற்போது மீளாய்வு செய்கின்றதுடன் முகாமைத்துவம் 2025 இல் உரிய நடவடிக்கைகள் எடுக்கும்	நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற பெறவேண்டியவைகளின் அறவீட்டு தன்மையை மீளாய்வு செய்வதற்கும் நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற மீதிகள் மீது முறையான அளவீடுகள் எடுப்பதற்கும் பரிந்துரைத்துள்ளது.

மீதிகளின் உண்மைத்தன்மை மற்றும் நேர்மையை உறுதிப்படுத்துவதற்கு ஏனைய பெறவேண்டியவைகளில் எதிர் மறை மீதிகளிற்கு பின்னாலான காரணங்களை முழுமையாக மீளாய்வு செய்வதற்கு வேண்டப்பட்டிருந்தது.		
ஆ வரையறுத்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் (SLICL) 2024 ஆம் ஆண்டிள் பொது பொது திறைசேரிக்கு கன்வில் கோல்டிங் (பீவீரீ) இல் அதன் முதலீட்டை மாற்றியிருந்தது. எவ்வாறாயினும், இந்த மாற்றத்திற்கு ஆதரவளிப்பதற்கு முறையான சான்றுபடுத்தல் அல்லது எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. SLIC ஆனது மாற்றிய பெறுமதிக்காக பெறவேண்டியவை பதியப்பட்டிருந்த போதிலும் இந்த தொகையை தீர்ப்பதற்கு திறைசேரி சம்மதித்தமைக்கு சான்றுகள் எதுவும் இருக்கவில்லை. மேலும், SLIC ஆனது ஏற்பாடுகள் செய்வதற்கோ அல்லது பதிவழிப்பு தீர்மானம் எடுப்பதற்கு இந்த பெற வேண்டியவையின் அறவீட்டுத் தன்மை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.	நாங்கள் மீதி உறுதிப்படுத்தலை வேண்டி திறைசேரி செயலாளருக்கு எழுதியிருந்தோம் மற்றும் நாங்கள் தற்போது அவர்களுடைய பதிலிற்காக காத்திருக்கின்றோம்.	SLIC ஆனது தொடர்புபட்ட பெற வேண்டியவையை தீர்ப்பதற்கு உடன்படுகின்றது கன்வில் கோல்டிங் மாற்றத்தை உறுதிப்படுத்த திறைசேரியிடமிருந்து முறையான எழுத்து மூல உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டுமென பரிந்துரைத்துள்ளது. அத்தகைய உறுதிப் படுத்தலின்மையால் SLIC ஆனது பெற வேண்டிய மீதிகளின் அறவீட்டுத் தன்மை மற்றும் அறவிட முடியாதிருப்பின் கடன் தள்ளுபடி அல்லது பதிவழிப்புத் தொகையின் அங்கீகாரம் என்பவற்றினை மதிப்பிடப்பட வேண்டும்.

1.7. வெளிப்படுத்தப்பட்டிருக்காத தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வின் அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ வரையறுத்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயுள், வரையறுத்த சினோலங்கா கொஸ்பிட்டல் மற்றும் ஜபா (தனியார்) கமபனி மற்றும் வரையறுத்த லங்கா கொஸ்பிட்டல் கூட்டுத்தாபன PLC போன்ற தொடர்புபட்ட தரப்பினரிற்காக கம்பனியால் வெளிப்படுத்தப்பட்ட இறுதி மீதி உறுதிப்படுத்தல் ஊடாக அந்த தொடர்புபட்ட தரப்பினரால் நேரடியாக உறுதிப்படுத்தப்பட்டவாறு ரூபா 4,587,564 ஆக இருந்தது. மேலும், கம்பனியானது அடிச்சீட்டில் இடப்பட்டவாறு தொடர்புபட்ட தரப்பினரில் முதலீடுகளை ஆய்வு செய்து தீர்வுகாணும் முறையான இணக்க பொறிமுறை	SLICLL ஆனது இணக்கம் செய்யப்பட்டிரந்ததுடன் 2025 மார்ச் மாதத்தில் திருத்தப்பட்டது. -வரையறுத்த சினோலங்கா கோஸ்பிட்டல் நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற ஆரம்ப மீதிகள் உள்ளதுடன் அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும்.	கம்பனியானது சகல தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீதிகள் இணக்கம் செய்தல் மற்றும் முரண்பாடுகளிற்கான காரணங்களை கண்டறிதல் என்பன ஊடாக செயற்பட பரிந்துரைத்துள்ளது. மேலும், காலரீதியான இணக்கம் மற்றுமு் முறையான ஆதாரமான ஆவணங்களுடன் பெறுகின்ற உறுதிப்படுத்தல் என்பவற்றிற்காக கட்டமைக்கப்பட்ட நடைமுறையை அமுலாக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. .

கிடைக்கவில்லை.

1.8. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானஙகளுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ.	அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் (SOE) கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டல்	அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகளின் கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் 2.25 ஆம் பிரிவின் கீழ் பங்கிலாபங்கள், உரிமை மூலதன மாற்றங்கள் மற்றும் பங்குரிமைகள் மற்றும் பிரதான கொடுக்கல் வாங்ககல்கள் உள்ளடக்கிய விடயஙகளை வெளிப்படுத்தும் கொள்கை சபை அனுமதித்த துணைநிலை கொள்கையொன்றை கொண்டிருக்க வேண்டும் எவ்வாறாயினும், கம்பனியானது துணைநிலை கொள்கை வைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	இந்த விடயத்தில் முன்னைய ஆண்டுகளில் சில முயற்சிகள் எடுக்க்பட்டன. எவ்வாறாயினும் அவை முடிவாக இறுதி செய்யப்படவில்லை. நாங்கள் இந்த விடயத்தை வெளிப்படுத்தவதற்கு வேண்டிய அளவீடுகளை கடைப்பிடிக்கின்றோம்.	கம்பனியானது ஆளுகை நடைமுறை, ஆபத்தை குறைத்தல் மற்றும் ஆதார உபாய தீர்மானம் எடுக்கின்ற நடைமுறை என்பவற்றினை தரமுயர்த்துவதற்கு துணைநிலை நிறுவனங்களின் மீளாய்விற்காக கட்டமைக்கப்பட்ட மற்றும் வினைத்திறனான வேலையமைப்பு தாபிக்க முடியும்,
ஆ	இலங்கை CA இன் கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டல்	இலங்கை CA இன் கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டலின் D.5.2 ஆம் பிரிவின் கீழ் ‘‘சபையானது சபையால் நியமிக்கப்பட்ட தலைவருடன் மூன்று சுதந்திர நிறைவேற்றல்லா பணிப்பாளர்களை கொண்டிருக்கின்ற RPT மீளாய்வு குழு, தாபிக்கப்பட்டு காலாண்டு ரீதியான கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்’’ எவ்வாறாயினும், கம்பனியானது தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கலை குழுவைக் கொண்டிருக்க வில்லையென அவதானிக்கப்பட்டது.	தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல் (RPT) குழு தாபிப்பதற்கான பரிந்துரைகள் முறையாக கருத்திற்கொள்ளப்பட்டது தற்போது கணக்காய்வு மற்றும் இணக்கக்குழு இணைந்த வெளப்படுத்தலின் நியாயதன்மையை போல தொடர்புபட்ட தரப்பு கொடுக்கல் வாங்கலை இனஙகாண்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறை வினைத்திறனுடன் மீளாய்வு செய்யப்படுகின்றன. குழுவானது அத்தகைய தரப்பினரிடமிருந்து தொடர்புபட்ட தரப்பு அக்கறையின் வருடாந்த கூற்று பெறுவதற்கு நடைமுறையை கண்காணிக்கின்றது.	கம்பனியானது சகல தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் கண்காணிதத் மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதிப்பதற்கு தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல் குழு தாபிப்பதற்கு பரிந்துரைத்துள்ளது.

மேலும் நிறுவனத்தனுடைய வருடாந்த அறிக்கைக்காக SOE கூட்டு ஆளுகை வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட வேண்டுகைகளை வெளிப்படுத்துவதுடன் இணங்குவதை உறுதிப்படுத்துகின்றது.

1.9. காசு முகாமைத்துவம்

கணக்காய்வின் அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ வங்கி கணக்கிணக்கங்களில் இனங்காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகள் இரண்டின் கீழும் இனங்காணப்படாத மீதிகள் உள்ளடக்கப்பட்டது. அந்த விடயங்கள் இணக்கம் செய்யப்படாது இருந்ததுடன் அறிக்கை திகதியில் உள்ளவாறு முறையாக வகைப்படுத்தப்பட்டு தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. தலைமை அலுவலகத்தால் பதியப்பட்ட காசு கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கிய இனங்காணப்படாத தொகைகளின் மீதி கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.	இனங்காணப்படாத செலவுகளின் ரூபா 3 மில்லியன் மாத்திரம் 2025 யூன் 02 இல் உள்ளவாறு நிலுவையீல் உள்ளது. நாங்கள் அந்த நிலுவைகளை இணக்கம் செய்திருந்தோம்.	கம்பனியானது கசல இனங்காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகளின் மூலத்தை இனங்காணப்பதற்கு விரிவான மீளாய்வு நடாத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது இது சகல கொடுக்கல் வாங்கலையும் முறையாக வகைப் படுத்தப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துவதற்கு விரிவான விசாரணைகள் மற்றும் கணக்கிணக்க நடைமுறைகளை உள்ளடக்கப்பட வேண்டும் இவற்றின் மூலம் நிதிப் பதிவேடுகள் உண்மையான மற்றும் நேர்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

அமைவிடம்	இனங் காணப்பட்ட கடன் (இரூபா)	இனங் காணப்படாத கடன் (இரூபா)
தலைமை அலுவலகம்	223,758	13,388,759

1.10 வரிப்பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கம்பனியானது இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் (SLICL) மற்றும் அதன் பிரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மாற்றுதல் செயற்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குவால் (IRCSL) நெறிப்படுத்தப்பட்ட பிரித்தல்	இதன் விளைவாக PPE ஐ IP ஆக மீள வகைப்படுத்தப் பட்டிருந்தது. உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் வரி விதிக்கக்கூடிய வாடகை நோக்கங்களிற்காக பெறப்பட்ட கட்டிடங்கள் அல்லது காணிகள் விதிக்க்கூடிய நிகழ்வை ஏற்படுத்தாது. மாற்றுவழி நடவடிக்கையாக IRA இன்	கம்பனியானது உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய நிதி அமைச்சிடமிருந்து ஏழுத்து மூல அனுமதியை பெறுவதற்கு முறைப்படி உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வேண்டுகைகளிற்கமைய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பொது லிமிடெட்ட (SLICGL) மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயுள் லிமிட்டெட் (SLICLL) என பிரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனியானது 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் மூன்றாவது பட்டியலின் கீழ் வரி விலக்கழிப்பை பிரயோப்பதற்கு முன்நிபந்தனையில் நிதி அமைச்சலிருந்து வேண்டப்பட்ட எழுத்துமூல அனுமதியை பெற்றிருக்கவில்லை. இந்த அனுமதியின்மை குறித்த வரி விலக்கழிப்பிற்காக வெளிப்படுத்த கூடிய சாத்தியம் தகுதியற்றிருந்தது. இது வரிப் பொறுப்புகளிற்கு பிரயோகிகக்கூடிய சட்ட தேவைகளுடன் இணங்காமையில் விளைந்தது.

மூன்றாவது பட்டியலின் விடயங்களில் (gg) நாங்கள் நம்புவதற்கு முயற்சிக்கின்றோம். இதன்படி, பிரித்தல் முறைப்படி சொத்ருக்களிலிருந்து பொறுப்புக்களை மாற்றுவதில் எழுந்த இலாபம் விலக்கழப்பதற்கு எழுத்து மூல அனுமதியை வேண்டி திறைசேரி செயலாளருக்கு எழுதப்பட்டது. மேலும், 2025 மார்ச் 20 ஆந் திகதிய எங்களுடைய கடிதம் நிதி அமைச்சராக செயற்பட்ட அதிமேதகு சனாதிபதிக்கும் அதன் பிரதியை திறைசேரி செயலாளருக்கும் விலக்கழிப்பிற்கு நாங்கள் திரும்பவும் எழுதியிருந்தோம். பிஸ்கால் கொள்கையின் பொது முயற்சிகள் குழுவின் பணிப்பாளர் நாயகம் திரு அத்துளு குமார நாங்கள் அவர்களுடைய பதிலிற்காக காத்திருக்கின்றோம்.

இது 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதீகாரச் சட்டத்தின் மூன்றாவது பட்டியலின் கீழ் விலக்கழிப்பிற்கான தகுதியை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவு

கம்பனி

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,635,639,000 தொகையான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 7,778,571,000 தொகையாகக் காணப்பட்டது. ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 4,142,932,000 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயள் லிமிட்டெட் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட் என்ற பெயரில் இரண்டு தனித்தனியான நிறுவன்களிற்கு கம்பனயின் பிரதான தொழிலை மாற்றுவதன் காரணமாக ரூபா 40,635,092,000 ஆல் மொத்த காப்புறுதி பங்குத் தொகையின் வீழ்ச்சி இந்த் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

தொகுதி

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 9,087,379,000 தொகையான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 13,755,175,000 தொகையாகக் காணப்பட்டது. ஆகையால், நிதி விளைவுகளில் ரூபா 4,667,796,000 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவினத்தில் ரூபா 3,425,743,000 ஆல் அதிகரித்தமையே வீழ்ச்சிக்கான பிரதன காரணங்களாகும்.

2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

வரிசை விடயம்	2024 ரூபா மில்லியன்	2023 ரூபா மில்லியன்
தோகுதி **வருமானம்**	182,086	170,785
முரண்	11,301	14,180
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	6.62%	9.05%

மொத்த பதிவுசெய்யப்பட்ட தவணைப்பணம்	51,264	43,321
முரண்	7,943	2,267
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	18.34%	5.52%
தேறிய உழைத்த தவணைப்பணம்	42975	35,958
முரண்	7,017	-848
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	19.51%	-2.30%
முதலீட்டு வருமானம்	36,365	29,490
முரண்	6,875	14,120
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	23.31%	91.87%
தேறிய மாற்றப்பட்ட (நட்டம்) / இலாபங்கள்	-26	-829
முரண்	803	-11,006
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	-96.86%	-108.15%
ஏனைய வருமானம்	-1,704	2,893
முரண்	-4,597	-671
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	-158.90%	-18.83%
மொத்த வருமானம்	182,086	170,785
முரண்	11,301	14180
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	6.62%	9%
தேறிய நலன்புரி மற்றும் கோரிக்கைகள்	-23,499	-21,778
முரண்	-1,721	353
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	7.90%	-1.60%
காப்பீட்டு மற்றும் தேறிய சுவீகரிப்பு கிரயம் (மீள்காப்புறுதி உள்ளடங்க)	-3,822	-3,502
முரண்	-320	-200
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	9.14%	6.06%
ஒப்பந்த பொறுப்பிலுள்ள மாற்றங்கள்- ஆயுள் நிதி	-26,409	-18,290
முரண்	-8,119	-7,272
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	44.39%	66%

ஏனைய செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவினம்	-23,876	-20,450
முரண்	-3,426	6,417
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	16.75%	-23.88%
வருமான வரிச் செலவினம்	4,965	-6,203
முரண்	-1,238	-2624
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	-19.96%	73.32%
ஆண்டிற்கான தேறிய இலாபம்	9,087	13,755
முரண்	-4,668	1,171
அதிகரிப்பு / (வீழ்ச்சி)	-33.94%	9.31%

2.3 விகிதப் பகுப்பாய்வுகள்

கிடைக்கப்பெற்ற தகல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான தொகுதியின் சில முக்கியமான வீதங்களின் போக்கு கீழே தரப்பட்டுள்ளன.

குறித்த வீதங்கள்- தொகுதி	**2024**	**2023**
பிடிகாசு வீதம்	84%	83%
இலாபத்தன்மை வீதம்	5%	8%
ROA	3%	5%
ROE	6%	10%
முதலீட்டு விளைவு	11%	11%
மொத்த சொத்துக்களிற்கான நிதிச் சொத்துக்கள்	80%	71%
வருமான வளர்ச்சி	6.62%	9%
சொத்து சுழற்சி	0.42	0.44
EPS	15.15	22.94
ஒரு பங்கிற்கான தேறிய சொத்துக்கள்	258.12	226.70
திரவ வீதம்	2.21	1.22

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வின் அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
அ	**மெற்றோ கிளையின் இடமாற்றம்** மெற்றோ கிளை கொழும்பு 4 பிராந்தியத்தை மேவுகின்றதுடன்	மெற்றோ கிளைக்காக தனியான இடத்தை கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்	உபாய திட்டங்கள் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை

மெற்றோ கிளை இடம் மாற்றுவதற்கு முன்னர் 7 விற்பனை முகாமையார்கள், பிராந்தி விற்பனை முகாமையாளர்கள் மற்றும் 50 கள உத்தியோகத்தர்களுடன் 7 கிளைகளை கொண்டுள்ளது. இது தலைமை அலுவலக கட்டிடத்தின் 10 மற்றும் 13 ஆவது மாடிகளில் இடம் மாற்றப்பட்டதுடன் அண்ணளவாக 2071 சதுர அடியில் அமைந்துள்ளது.

2018 யூன் 21 இல் நடைபெற்ற நிறைவேற்று குழுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் தலைமை அலுவலகத்திலுள்ள கிளையை அகற்றவதற்கும் தலைமை அலுவலகத்திற்கு வெளியே அவற்றினை இடம் மாற்றுவதற்கும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவர் வரால் முதல் ஆலோசனை வழங்கப்பட்டது

செலவு நலன் பகுப்பாய்வு, சாத்தியவளக் கற்கை, கருத்துரை தாள் அல்லது எப்படி இலாபத் தன்மையுடன் இடமாற்றம் செய்வதென பகுப்பாய்வு செய்தல் என நியாயப்படுத்து என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், 2020 திசெம்பர் 3 இலிருந்து சுற்றுலாத்துறை அமைச்சு 6 ஆவது மாடியிலிருந்து வெளியேறியிருந்ததுடன் 2021 மே 6 இலிருந்து SLIC இன் 4 ஆவது மாடியிலிருந்த வர்த்தக திணைக்களம் வெளியேறியிருந்தது ஆகவே, தலைமை அலுவலகத்திற்கு அண்ணளவாக 13,000 சதுர அடி வெற்றிடமாக இருந்தது கொள்வனவு நடைமுறை செயற்பாட்டில் இருந்தன.

இந்த கொள்வனவு நடவடிக்கைகாக மொத்த கிரய மதிப்பீடு தயாரித்தலை நிரூபிப்தற்கு ஏற்றுகொள்ளக்கூடிய ஆவணங்கள் இருக்கவில்லை. இதன் விளைவால் ளுடுஐஊ கொள்வனவு குழு/ தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு அமைச்சின் பிரதிநிதியை முறைப்படி செய்யப்பட்டிருந்தது.

SLIC இனுடைய கிளை தலைமை அலுவலக வளவிற்குள் மெற்றொ கிளை அமைவதின் தவறினை திருத்தவதற்கு உபாயமாகவும் அவசியமாகவும் இருந்தது.

இந்த கொள்வனவு SLIC இன சாதாரண வணிக போக்கில் செயற்படுவதாக கருத்திற்கொண்டு செயற்படுத்தப்பட்டது. அதாவது தனித்துவமான அல்லது முன்னோடியான கொள்வனவாக இருக்கவில்லை.

இந்த கொள்வனவு 2006 GOSL கொள்வனவு வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட எண்ணக்கருக்கள் மற்றும் கொள்கைகளிற்கமைய பொது கேள்வி ஊடாக செயற்படுத்தப்பட்டது. கேள்விகள் சந்தையிலிருந்து எவ்வித பதில்களும் கிடைக்காமையால் இரண்டு தடவை அழைக்கப்பட வேண்டியிருந்தது.

SLIC இன் சாதாரண வணிகத்திலிருந்து எழுந்து கொள்வனவு வேண்டுகையை கருத்திற்கொண்டு அமைச்சின் பிரதிநிதிகள் உள்ளடங்க பணிப்பாளர் சபையின் அனுமதி / அல்லது பொறுப்புடன் மதிப்பாய்வு நடாத்தப்பட்டிருந்தது. இருக்கின்ற நடைமுறையை பயன்படுத்தல் மற்றும் முறைமைகள் என்பன

செயற்பாட்டின் ஒரு பகுதியாக அவசியமான தொழில்நுட்பம் மற்றும் நிதி மதிப்பாய்வு மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் முறையாக பதியப்பட்டிருந்தது. மற்றும் அவசியமான தகவல்கள் SLIC ஆல் பின்பற்றப்பட்ட படிமுறைகள் 2006 GOSL கொள்வனவு வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டவாறு உள்ளதுடன் SLIC ஆல் கணிப்பீடு செய்யப்பட்டவாறு கொள்வனவின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அந்நேரத்தில் பிரயோகிக்கக் கூடியவாறு உரிய அதிகார எல்லையுடன் இணங்கியுள்ளன.

SLIC ஆனது குறைவாக மதிப்பாய்வு செய்யப்பட்ட மற்றும் கணிசமான பொறுப்புடைய கேள்வி எனக் கருதப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு உயர் பெறுமதி கொள்வனவு தீர்மானம் விரிவான சாத்தியவளக் கற்கைகள் மற்றும் கிரய நல பகுப்பாய்வு மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.

தீர்மானம் எப்போது மூன்று Es ஐ முன்றேற்றுவதை நோக்கா கொண்டிருக்க வேண்டும். (செயற்திறன் ஆக்கபூர்வ மற்றும் சிக்கனம்). மேலும் வெளிவார் வாடகை உடன்படிக்கை தொடங்குவதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய உள்ளக இடங்களின் விரிவான மதிப்பீடு இருக்கும் வளங்களின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் செலவுகளை குறைப்பதற்கும் நடாத்தப்பட வேண்டும்.

கொண்டிருக்கின்ற அவசியத்தை இனங்காண்பதற்கு இயலாதிருந்தது. தலைவர் ரூபா 10 மில்லியனிற்கு மேலான கொள்வனவிற்கு பெறுமதியை விஞ்சிய கொள்வனவு குழு கூட்டங்களிற்காக அமைச்சின் பிரதிநிதியை அழைப்பதற்கு 2016 மே 10 ஆந் திகதிய ALL/40/05/2016 ஆம் இலக்க கடிதம் ஊடாக அறிவுறுத்தல் வழங்கியிருந்த போதிலும் சொல்லப்பட்ட அமைச்சலிருந்து எந்தவொரு பிரதிநிதியும் இந்த கொள்வனவில் கலந்துகொள்ளவில்லை.

2021 யூலை 26 இல் மிகக் குறைந்த மற்றும் கணிசமான பொறுப்புடைய கேள்வியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் பிரகாரம் 2016 செப்தெம்பர் 28 இல் உள்ளவாறு கொழும்பு மாநகர சபையால் அனுமதிக்கப்பட்டிருந்த கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த கொள்வனவின் ஆரம்ப கட்டத்தில் இந்த அனுமதிக்கப்பட்ட வரைபடம் 5 படுக்கையறைகளை கொண்ட இரண்டு மாடி கட்டிடத்திற்கானது மற்றும் 5 மாடி வர்த்தக கட்டிடத்திற்குரியதாக இருக்கவில்லை. சொத்து உரிமையாளர் முழுக் கட்டிடத்திற்கான அனுமதிக்கப்பட்ட கட்டிட வரை படம் அல்லது ஏற்றுக்கொள்ளல் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை.

வாடகை மதிப்பீட்டு அறிக்கையின் 6 ஆம் பிரகாரம். வாடகை மதிப்பீட்டிற்காக கிடைத்திருந்த அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம் இரண்டு மாடி வதிவிட கட்டிடத்திற்கானதாக உள்ளது. கட்டிட வரைபடத்தின் பிரகாரம் மொத்தமாக 3531 சதுரஅடி பரப்பளவை கொண்டிருந்தது. அறிக்கையின் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் இரண்டு மாடி வதிவிட கட்டிடத்திற்கான ஏற்றுக்கொண்டதுடன் மற்றும் வழங்குதற்கு பிந்திய பேரம்பேசல்கள் ஊடாக கேள்வி தொகையில் இடத்தினை பெறுவதற்கு முடிந்தது. இதன்மூலம் மேலும் நிதி நன்மையை உறுதி செய்தது.
ஒப்பந்தம் செய்யப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேலாக எந்தவகையிலும் கொடுப்பனவு செய்யப்படவில்லை.

ஆக்கிரமிக்கப்பட்ட சகல உரிய மற்றும் அவசியமான ஆவணங்கள் முறையாக பதியப்பட்டிருந்ததுடன் கட்டிடம் உரிய நோக்கத்திற்காக ஏற்றதாக கருதப்பட வேண்டும். இது SLIC ஆல் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றது.

கொள்வனவு பணிப்பாளர் சபையால் முறையாக அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவை SLIC இன் அனைத்து முக்கிய மற்றும் வதிவிட ஆபத்துக்களை உளளடக்கி 5 ஆண்டுகால இடை நிறுத்தப்படாத பிரிவிற்கமைய குத்தகை உடன்படிக்கை நிறைவேற்றுவதற்கு அனுமதி அளித்திருந்தது. இந்த வளவு தொடர்ந்தும் SLIC ஆல் சட்டரீதியாக உடமையாகக் பட்டுள்ளதுடன் அவை அந்த நோக்கத்திற்காக வினைத் திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

11. இன்றுவரை வணிக செயலாற்றல் தலைவரின் ஆரம்ப உபாய நெறிப்படுத்தலுடன் ஒத்துப் போகின்றதுடன் மூல நோக்கங்கள் நிறை வேற்றப்பட்டன என்பதைக் குறிக்கின்றது.

அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடமாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உள்ளபடியாக கட்டிடம் இன்னொரு 3 மாடிகளிற்கு விரிவாக்கப் பட்டிருந்ததுடன் மொத்தமாக 5 மாடிகளிற்காக அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம் மதிப்பீட்டாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

வாடகை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம். மாதாந்த வாடகை தொகை (3531 சதுரஅடி பரப்பளவுள்ள அனுமதிக்கபப்பட்ட கடடிட வரைபடத்தின் அடிப்படையில்) ரூபா 500,000 மாத்திரமே. பெறப்பட்ட அனுமதிக்கபப்பட்ட கடடிட வரைபடம் மீதான கட்டிட உரிமையாளர் உடன்படிக்கை மற்றும் 9,627 சதுரஅடி முழுப் பரப்பளவிற்கான COC இன் பிரகாரம் வாடகை ரூபா 1,000,000 வரை அதிகரித்திருந்தது. இந்த மதிப்பிடப்படப்ட வாடகை சகல 5 மாடிகளினதும் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம் மற்றும் உறுதிப்படுத்தல் சான்றிதழ் என்பன உட்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தலைவரின் 2021 திசெம்பர் 17 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் SLIC இற்கு உறுதிப்படுத்தல் சான்றிதழ் முன்வைக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணச் சான்றுகள் அவதானிக்கப் பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

	கணக்காய்வின் அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
அ	2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதி தொழில் பிரமாணங்கள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட முன்னைய தொழில் பிரிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும்	தற்போது SLIC குழுவானது கோல்டிங் கம்பனி மூலம் நிறை வேற்ற முடிந்த சாத்தியமானளவு வியாபார முறையை விருத்தி செய்கின்ற நடைமுறையில் உள்ளது. மேலும், நாங்கள் முரணான நடைமுறை தொடர்பில்	வியாபார போக்கின் தன்மை உறுதிப்படுத்த தவறியமை சாத்தியமான வருமான அங்கீகார தவறுகள், தவறான வருமான வகைப்படுத்தல் மற்றும் நிதி

நிறுவனங்களிற்கு மாற்றப்பட்டது. • இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயுள் லிமிட்டெட் (SLICGL) – ஆயுள் காப்புறுதி செயற்பாடு • இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயுள லிமிட்டெட் (SLICGL) – பொதுக் காப்புறுதி செயற்பாடு இதன் விளைவால் கம்பனியானது காப்புறுதி தொடர்புபட்ட நடவடிக்கைகளில் இனி ஈடுபடவில்லை. எவ்வாறாயினும், கம்பனியானது பின்வருவன தெளிவாக வரையறுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. • தற்போதைய தன்மை மற்றும் அதன் செயற்பாடுகளின் நோக்கம். • அதன் பிரதான வருமான வழி • அதன் உபாய போக்கு மற்றும் பிரித்தலிற்கு முன்னரான வர்த்தக நோக்கம்	நிதி அமைச்சிலிருந்தான நெறிப்படுத்தலை வேண்டியிருந்ததுடன் பணிபபாளர் கூட்டு நடவடிக்கைகளிற்கு முகவரியிடப்பட்ட 2025 பெப்ரவரி 06 அந் திகதிய எங்களுடைய கடிதத்தில் SLIC இற்கு முன்வைத்திருந்தோம். தற்போது நாங்கள் அவர்களுடைய பதிலிற்காக காத்திருக்கின்றோம். தற்போது பிரதான வருமான மூலமாக முதலீட்டு வருமானம் மற்றும் வாடகை வருமானம் உள்ளது.	அறிக்கையிடல் பிரச்சனைகளிற்கு வழிவகுக்கும். இது பிரமாண இணக்கமின்மை, கணக்கீட்டு விதிகளின் முறையற்ற பிரயோகம் மற்றும் சாத்தியான வரிப் பெறுபேறுகள் என்பவற்றில் ஆபத்து எழக்கூடும். கம்பனியானது நிதி அறிக்கையிடலின் உண்மை மற்றும் நியாய தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் பிரதான வருமான வழி மற்றும் வியாபார தன்மையை தெளிவாக மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

3.3 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வின் அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கம்பனியால் சட்டரீதியாக உடமையாக்கப்பட்ட சில மோட்டார் வாகனங்கள் காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயுள் லிமிட்டெட் (SLICLL) மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட (SLICGL) ஆகிய இரண்டாலும் பயன்படுத்துவது தொடர்ந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. பின்வரும் ஆயுள் மற்றும் பொதுவான காப்புறுதி செயற்பாடுகள்2024 பெப்ரவரி 1 இலருந்து செயற்படுகின்றது. இந்த இரண்டு நிறுவனங்களினதும் சொதது பயன்பாடு விதந்துரைகள், சட்ட மற்றும் செயற்பாட்டு பிரித்தல் தகராறு தொடருகின்றது, சொத்தப் பயன்பாட்டு குழுவில் செயற்பாடு ஒன்றுடன் ஒன்று சார்ந்திருக்கும் அளவு இருந்தது. அத்தகைய நடைமுறை பின்வரும் பாதிப்புக்கள் எழக்கூடும். • SLICLL மற்றும் SLICGL இடையில் தவறான கிரய ஒதுக்கீடு	கம்பனியானது SLICLL மற்றும் SLICGL இற்கு வாகன உரிமையாண்மையை மாற்றம் செயற்பாட்டில் உள்ளது. கம்பனியானது மோட்டார் வாகனங்களை பதிவதற்கு SLICGL இற்கு சொந்தமான வாகனங்களின் மாற்றுதல் படிவத்தை சமர்ப்பித்திருந்தது. 2025 செப்தெம்பர் 09 இல் உள்ளவாறு கம்பனியானது SLICGL இற்கு 247 மோட்டார் வாகனங்களில் 80 வாகனங்களின் உரிமையாண்மை மற்றும் SLICLL இற்கு 42 வாகனங்களில் 25 வாகனங்களை மாற்றியிருந்தது.	உள்ளபடியான பயன்பாட்டின் அடிப்படையில் SLICLL மற்றும் SLICGL இற்கு ஒதுக்கிய வாகன உரிமையாண்மை மற்றும் பயன்படுத்திய கிரயம் என்பவற்றினை முறையாக ஒதுக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. இது சரியான நிதி அறிக்கையில் மற்றும் பிரித்தல் வேண்டுகையுடன் இணங்குதல் என்பதை உறுதிப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களிற்கு வாகன உரிமையை மாற்றுதல் அல்லது கிரய பங்கீட்டு உடன்படிக்கை அமுலாக்கல் என்பன மூலம் அடைய முடியும்.

- உரிமையாண்மை மற்றும் சொத்துப் பதிவேட்டில் முரண்பாடு
- 2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதி தொழில் பிரமாண (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் கீழ் சொத்துக்கள் மற்றும் செயற்பாடுகளை பிரித்தல் தொடர்பில் பிரமாண வேண்டுகையுடன் இணங்காமை